**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு.R. பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் செவ்வாய்கிழமை
**அசல் வழக்கு எண்.110/2025 [CNR No.TNMD240002822025]**

வீரணன் .......வாதி

/ எதிர் /

1. பாண்டி
2. வள்ளி .......பிரதிவாதிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 21.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.O.P.செல்வம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. முனியாண்டி அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்பி அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ஒருதலைப்பட்ச…………

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு பிரதிவாதி தாவா கடன்தொகையான ரூ.3,66,000/– செலுத்த உத்தரவிடக்கோரியும், அசல் தொகையான ரூ.3,00,000ற்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பாணை நாள்வரை 9% வீதம் வட்டி செலுத்த உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவு தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

## 2. வாதி வழக்குரையின் சுருக்கம்:–

வாதியிடம் பிரதிவாதிகள் கடந்த 20.08.2023ம் தேதி வாதியின் வீட்டிற்கு வந்து அவசர நிமித்தம் மற்றும் குடும்ப செலவினங்களுக்காகவும், சில்லரைக்கடன் தீர்ப்பதற்காகவும் வாதியிடம் கடனாக ரூ.3,00,000 பெற்றுள்ளார் என்றும், மேற்படி கடனுக்கு ஆதரவாக பிரதிவாதிகள் சாட்சிகள் முன்பு புரோநோட்டில் ரூ.3,00,000/–ற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.1வீதம் வட்டியும், அசலும் சேர்த்து வாதிக்கோ அல்லது வாதியின் அதிகாரம் பெற்ற நபருக்கோ கடன் தொகையைத் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் சாட்சிகள் முன்பு புரோநோட்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அதன்பின்னர் வாதியிடம் பிரதிவாதிகள் பணம் கடனாக பெற்றுகொண்ட நாள்முதல் வட்டியை முறையாக செலுத்தவில்லை. பிரதிவாதிகள் கடன் தொகையைத் திரும்ப செலுத்த எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றும், வாதி பலமுறை நேரில் பணம் திரும்ப செலுத்தக்கோரியும் பிரதிவாதிகள் சாக்கு போக்கு சொல்லி பணம் திரும்பி செலுத்தாமல் காலம் கடத்தி வந்துள்ளார். எனவே, வாதி பிரதிவாதி பெற்ற ரூ.3,00,000க்கு மாதம் ரூ.100/–க்கு ரூ.1வீதம் வட்டியும், அசலையும் திருப்பித் தரவேண்டும் என்று கடந்த 20.06.2025ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 25.06.2025ம் தேதியன்று பெற்றுக்கொண்ட வாதி பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

**5. தீர்வுக்குரிய பிரச்சனை:**

வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? அல்லது இல்லையா?

**6. விவாதம் :**

**6(1)** வாதி தரப்பில் பிரதிவாதிகள் குடும்பச் செலவுக்காகவும், சில்லரைக் கடன்களைத் தீர்க்கவும் எனக்கூறி வாதியிடம் 20.08.2023ம் தேதியன்று ரூ.3,00,000/- கடனாக கேட்டு பெற்று அதற்கு ஆதரவாக அன்றே சாட்சிகள் முன்னிலையில் புரோநோட் எழுதிக்கொடுத்ததாகவும், அந்த கடனிற்காக மாதம் 1 சதவீதம் வட்டி செலுத்தி வாதி கேட்கும்போது பணத்தைத் திரும்ப தருவதாக உறுதியளித்தார் என்றும், வாதி பிரதிவாதிகளிடம் பணத்தைக் கேட்டபோது அசல் மற்றும் வட்டித்தொகையைப் பிரதிவாதிகள் கொடுக்காமல் காலம் கடத்தியதால் வாதி தாவா வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே பிரதிவாதிகள் வாதிக்கு அசல் ரூ.3,00,000 மற்றும் அதற்குண்டான வட்டி தொகையை 20.08.2023 முதல் 20.06.2025ம் தேதிவரை செலுத்தக் கடமைப்பட்டவர் என்று முன்வைக்கப்பட்டுள்ளது.

**6(2)** பிரதிவாதிகள் வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்து வாதி தரப்பு கட்சியை மறுக்கவில்லை. மறுக்கப்படாத சங்கதிகள் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகவே கருதத்தக்கது என்ற இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 58ல் கண்டவாறு இவ்வழக்கில் பிரதிவாதிகள் வாதி தரப்பு வழக்கை ஒப்புக்கொள்வதாகவே அனுமானிக்க இயலுகிறது.

**6(3)** இருப்பினும், இவ்வழக்கில் வாதி வா.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டு பிராது சங்கதிகளுக்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சியமளித்து 20.08.2023ம் தேதி வாதிக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த புரோநோட் அசல் வா.சா.ஆ.1ஆகவும், 20.06.2025ம் தேதி வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2ஆகவும், மேற்படி அறிவிப்பினை 25.06.2025ம் தேதி பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6(4)** எனவே, மேற்கண்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள் கவனமுடன் பரிசீலித்ததில் பிராது சங்கதிகளுக்கு உறுதிபடுத்தும் விதமாகவே உள்ளது. எனவே, வாதி தரப்பில் இவ்வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதால் வாதி கோரியபடி வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் வாதிக்கு பிராது தொகை ரூ.3,66,000/- செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகையான ரூ.3,00,000/-ற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9% வட்டி வாதிக்கு திரும்ப செலுத்த வேண்டும் என இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருகெழுத்து - தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.25 04:05:10 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 கணேசன்

**வாதி தரப்பு சான்றாவணம்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.08.2023 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட் அசல் |
| வா.சா.ஆ.2 | 20.06.2025 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 25.06.2025 | அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் (எண்ணம் 2) |

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–**

–– இல்லை ––

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.25 04:05:17 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.
அசல் வழக்கு எண்.110/2025
வரைவு / சீரான / தீர்ப்புரை
நாள்:–25.08.2026